# டீசல், ஆடம்பர பொருட்களின் விலை அதிகரிப்பு


விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 26 இதழ் 370
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 9-2-1995


## பட்ஜெட்டில் தெரிவிப்பு

(கொழும்பு)
பொதுசன ஐக்கிய முன்னணி அரசினுல் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் மீதான இறக்கு மதித் தீர்வை குறைக்கப்பட்டுள்ளது. ஆடம்பரப் பொருட்களின் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. தபால் கட்டணங்கள் உயரும். டீசலின் விலை ஒரு ரூபாவினுல் கூடியுள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினுர் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் சுருக்கம் வருமாறு:

(2ம் பக்கம் பார்க்க]

## 9,000 கோடி ரூபா துண்டு விழுகிறது

(கொழும்பு)
நாடாளுமன்றத்தில் நேற்று பிரதி நிதியமைச்சர் ஜி. எல், பீரிஸ் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தின்படி 1994ம் ஆண்டுக்கான அரச வருமானம் 157 ஆயிரத்து 975 மில்லியன் ரூபாவாகவும், செலவீனம் 242 ஆயிரத்து 605 மில்லியன் ரூபாவாக இருக்கும்.

துண்டு விழும் தொகை 84 ஆயிரத்து 640 மில்லியன்

(4ம் பக்கம் பார்க்க)

★ அரச தரப்பினரிடம்

# நாலாம் கட்டப் பேச்சை ஆரம்பிக்குமாறு

# விடுதலைப் புலிகள் கோரிக்கை

## வெளிநாட்டு கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

[ கொழும்பு ]
அரசுக்கும் — விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நாலாம் கட்ட சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கும்படி அரசை விடுதலைப் புலிகள் கேட்டுள்ளதாக மோதல் தவிர்ப்பைக் கண்காணிக்க இலங்கை வந்துள்ள வெளிநாட்டு கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க

## சமாதானம் ஏற்படும் வரை

### அபிவிருத்திக்கு நிதி உதவி இல்லை

வெளிநாடுகள் தெரிவிப்பு

[கொழும்பு)
வடக்கு கிழக்கில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு முன்னர் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள வெளிநாடுகள் மறுப்புத் தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டிருந்த கனேடிய பிரதிநிதி, அம்மாவட்டங்களில் நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின்னரே அபிவிருத்தி பணிகளை தமது நாடு ஆரம்பிக்குமென கூறியுள்ளார்.

இக்கனேடிய பிரதிநிதி

(4ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றைத் தகர்க்க புலிகள் திட்டமிடவில்லை

### பொலிஸ் மா அதிபர் கூறுகிறுர்

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியைக் குண்டு வைத்துத் தகர்ப்பதற்குத் திட்டமிட்டிருந்ததாக நேற்றைய பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் முற்றிலும் பொய்யானவை என்று பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித்துள்ளார்.

தாம் கூறியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் பற்றிப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவிக்கையில்: இத்தகைய செய்தி

(2ம் பக்கம் பார்க்க)

★ வடபகுதியில்

## ரூபா 455 கோடி செலவில் நீர்ப்பாசனத் திட்டம்

(கொழும்பு)
வடமாகாணத்திற்கான அவசரகால புனர்வாழ்வு புனரமைப்பு திட்டத்தில் அரசாங்கம் நீர்ப்பாசன துறைக்கு முக்கிய கவனம் செலுத்த இருக்கிறது.

ஐந்து மாவட்டங்களில் உள்ள பல நீர்ப்பாசன திட்டங்கள் பராமரிப்பு இல்லாததால் பாதிப்படைந்து இருப்பதுடன் சேதமும் அடைந்திருக்கின்றன.

ஊழியர்கள் பாதுகாப்பு காரணங்களினுல் அங்கு செல்லமுடியாமல் இருந்தமை மற்றும் ஏனைய இடை

(4-ம் பக்கம் பார்க்க)

## இரு ஈபிடிபியினர் புலிகளிடம் சரண்

(யாழ்ப்பாணம்)
ஈ.பி,டி.பி இயக்க உறுப்பினர்கள் இருவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களைச் சரணடையுமாறு விடுதலைப் புலிகள் அண்மையில் விடுத்த வேண்டுகோளை அடுத்து மேற்படி இருவரும் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி.

(4ம் பக்கம் பார்க்க)

## முன்னுள் அமைச்சர்கள் ஜெயலலிதா மீது லஞ்சக்குற்றச்சாட்டு

(சென்னை)
தமிழக முதல்வர் ஜெயலலிதாவை பதவி நீக்கக் கோரி அவருக்கு எதிராக முன்னுள் அ. தி. மு. க. அமைச்சர்கள் நால்வர் லஞ்சக் குற்றச்சாட்டை தமிழக ஆளுநரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

முன்னுள் அமைச்சர்களான ஜி. விஸ்வநாதன், கே. ராசா

(2-ம் பக்கம் பார்க்க)

## சிமெந்து கொண்டுவர ராணுவம் அனுமதி மறுப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி வைத்திய சாலையை புனரமைப்பதற்கு தேவையான சீமெந்தைக் கொண்டுவர இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளனர்.

கடும் பிரயத்தனங்களின் மத்தியில் கொழும்பில் அனு

(4ம் பக்கம் பார்சக)

## இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் சூடு

### பலர் படுகாயம்

(சென்னை)
இந்தியாவின் தனுஷ்கோடி கடலில்மீன்பிடித்துக்கொண்டிருந்த தூத்துக்குடியைச் சேர்ந்த ஏழு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், 2 பேருக்குப் பலத்த காயமும் 5 பேருக்கு சிறுகாயங்களும் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் மருத்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1373)

## முச்சக்கர வண்டி அன்பளிப்பு

(நெல்லியடி)

இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவரினால் நோயாளர் நலன்புரிச் சங்கத்திற்கு முச்சக்கரவண்டிக்கென ரூபா ஏழாயிரம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 6-ந் திகதி காலை நெல்லியடி மகாத்மா திரையரங்கில் நடைபெற்ற வடமராட்சிக் கோட்ட கொடிவார ஆரம்ப நிகழ்வின்போதே இவ் அன்பளிப்பு பணம் வழங்கப்பட்டது. —160

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

''பாவை'' முத்திங்கள் அறிவு மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 11ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யா/வல்வை அ. மி. த. க. பாடசாலையில் இடம்பெறம்.

திரு, தங்கத்தமிழன் தலைமையில் இடம்பெறும் மேற்படி விழாவில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராககலந்து கொள்வார். -க

## நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கப்பலில் கொழும்பு செல்வதற்கு தெரிவு செய்யப்பட்ட கீழ்க்காணும் நோயாளர்கள் தங்கள் அடையாள அட்டை மற்றும் ஆவணங்களுடன் இன்று 9-ந் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பதிவு செய்வதற்காக தமது பணிமனையில் தவறுது சமுகமளிக்குமாறு யாழ்.போதனு வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மைலன் சின்னக்குட்டி, புத்தூர். வேலுப்பிள்ளை செல்லம்மா, இணுவில். ஞானப்பிரகாசம் திருச்செல்வம், சங்கானை. வேலாயும் ரங்கநாதன், யாழ்ப்பாணம். கணபதி கிருஷ்ணன், கிளிநொச்சி. வின்சன் லூர்தம்மா, குருநகர். சிவபாக்கியம், முத்துமுருகன், யாழ்ப்பாணம். முருகேசு நவரத்தினம், வட்டுக்கோட்டை. உதயகுமார் வேலுப்பிள்ளை, கரவெட்டி. தங்கரத்தினம், வேலுப்பிள்ளை, உதவியாளர், கரவெட்டி. குமாரசாமி தையல்நாயகி, கொக்குவில். பிரான்சிஸ் செல்வம், யாழ்ப்பாணம். புனிதவதி நடராசா, யாழ்ப்பாணம். ராசம்மா பொன்னுத்துரை, கோண்டாவில். கந்தசாமி தனலட்சுமி, அச்சுவேலி. கந்தசாமி, உதவியாளர். நாராயணபிள்ளை முத்துவிஞயகம், மானிப்பாய்.

# 14 லட்சம் குடும்பங்களுக்கு டீசல், ஆடம்பர

# உணவு முத்திரைகள்!

[கொழும்பு]

சுமார் 14 லட்சம் குடும்பங்கள் இந்த வருடம் உணவு முத்திரைகளை பெறவிருக்கின்றன.

கடந்த வருடம் வழங்கப்பட்ட உணவு முத்திரைகள் அடுத்த மாதம் வரை செல்லுபடியாகும். இந்த வருடம் உணவு முத்திரைபெறுவதற்கு இரண்டு லட்சம் குடும்பங்கள் புதிதாக விண்ணப்பித்துள்ளன.

புதிய விண்ணப்பங்கள் இப்பொழுது பரிசீலனை செய்யப்படுவதாகவும் அடுத்த மாதம அவர்றிற்கான உணவு முத்திரைகள் வழங்கப்படும் என் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது சேம நல முகாம்களில தங்கியுள்ள சுமார் ஒரு லட்சத்து நாற்பதுயிரம் குடும்பங்களுக்கும் உணவு முத்திரைகள் வழங்கப்படவிருக்கின்றன. -ரி

நிர்வ க

## உத்தியோகத்தருக்கு பயிற்சி நெறிவகுப்பு

(திருமலை)

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் சிரேஷ்ட எழுதுவினைஞர்கள் ஆகியோருக்கான மூன்று நாள் பயிற்சிநெறி வகுப்புக்கள் திருகோணமலையில் நடைபெறவுள்ளன.

வடக்கு—கிழக்கு மாகாண சபைமுகாமைத்துவப் பயிற்சி பிரிவினால் மார்ச் மாதம் ஏழாம் திகதி முதல் ஒன்பதாம் திகதி வரை இப்பயிற்சி நெறி நடாத்தப்படும்,

இப்பயிற்சிநெறிகளில் கலந்துகொள்வதற்கென ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலிருந்தும் குறைந்தது ஒரு நிர்வாக உத்தியோத்தரையும், இரு சிரேஷ்ட எழுதுவினைஞர்களையும் தவருது அனுப்பிவைக்கும்படி வடக்கு—கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் திரு. சி த. மார்க்கண்டு சகலபிரதேசசெயலர்களுக்கும் அறிவித்துள்ளார். —109

## விளையாட்டு உபகரணம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலரினல் விளையாட்டுக் கழகங்களுக்கும் சனசமூகநிலையங்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சுண்டுக்குழி சனசமூகநிலையத்துக்கு நேற்று யாழ். செயலகப் பிரிவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது. இவ்வைபவத்தல் விளையாட்டு உத்தியோகஸ்தர் திருமதி ரூபசிங்கம், கிராம உத்தியோகஸ்தர் திரு. எஸ். பாலசிங்கம், ஷி சுண்டுக்குழி சனசமூகநிலையச் செயலாளர் திரு. அ. தேவராசா ஆகியோர் கலந்து கொண்டனர். விளையாட்டு உபகரணங்களை பிரதேச செயலர் திரு. க. குணராசா மேற்படி சன சமூகநிலையச் செயலாளரிடம் கையளித்தார். -வி

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில ஆண்டு ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்களின் எழுத்து வாசிப்புத் திறன்களை விருத்தி செய்யும் வகையில் தெல்லிப்பளைக் கல்விக்கோட்டஆரம்பக் கல்விப் பிரிவினரால் உருவாக்கப் பெற்ற ,,பாலர் வாசகம்'' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று 9-ம் திகதி வியாழககிழமைபி-ப-3-00 மணிக்கு யூனியன் கல்லூரியில் நிகழும் கோட்ட பிரதிக் கல்வி-பணிப் பணிப்பாளர்திரு. த. துரைசிங்கம் தலைமையில் நிகழும் இவ் விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு வெளியிட்டு வைப்பார்.

## நாடாளுமன்றை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தபோதிலும், அப்படியான ஒரு தகவல் கிடைத்தது என்று கூறுவதும் தவருனது.

உண்மையில் நாடாளுமன்றச் சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில்தான் இந்தப் பத்திரிகைச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்குத் தேவையான பாதுகாப்பு உரிய முறையில் வழங்கப்பட்டுள்ளதா? என்ற தலைப்பிலேயே கலந்துரையாடல் நடைபெற்றது.

நாடாளுமன்றத்திற்குச் செல்லும் அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு பணியாற்றும் ஊழியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு பொலிஸாருக்கு அவசியம் என அந்தக் கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது அப்போது இப்படியான அச்சுறுத்தல் யாரால் ஏற்படமுடியும் என வினவப்பட்டது.

இப்படியான அச்சுறுத்தல்கள் விடுதலைப் புலிகளாலோ அல்லது வேறு இயக்கத்தினலோ ஏற்படலாம் என்று நான் கூறினேன்.

இதனைத் தவிர விடுதலைப் புலிகளால் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று நான் கூறவில்லை. இத்தகைய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் தவருனவை எனவும் கூறினர். ம-சி

## முன்னாள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராம், அழகு திருநாவுக்கரசு எஸ். ஆர். ராதா ஆகியோர் முதல்வர் ஜெயலலிதா மீது 40 லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் குறித்து சி. பி. ஐ, விசாரணை நடாத்த வேண்டும் எனவும் ஆளுநர் சென்னுரெட்டி ஜெயலலிதா அரசை பதவி நீக்கி முதல்வரும் அவரது உதவியாளர்களும் சட்டத்திற்கு புறம்பாக பெற்ற உடமைகளை பறிமுதல் செய்யும் ஆணைகளை பிறப்பிக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

இது குறித்து மேற்படி நால்வரும் நேற்று செய்தியாளர் மாநாட்டை கூட்டியிருந்தனர். சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரி விதிப்புக்கான அடிமட்ட வருமான எல்லை 42,000ரூபாவிலிருந்து 60,000 ரூபாவாக அதிகரிக்கப்பட இருக்கிறது. இந்த ஒழுங்கு இவ்வருடம் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து அமுலாகும். உழைக்கும்போதுவரிசெலுத்துவோருககும் நிவாரணம் வழங்கப்படும் புதிய திட்டத்தின் படி தொழில் மூலம் பெறப்படும் ஒரு லட்சத்று 44 ஆயிரம் ரூபாவுக்கு வரி விதிப்பிலிருநது முற்ருகவிலக்கப்படும். ஒரு லட்சத்து 44 ஆயிரம் ரூபாவிற்கும் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவுக்குமிடைப்பட்ட வருடாந்தம் பெறுவோர் வருமானம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வார்கள். ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறும் ஊழியர்களுக்கு 3,000 ரூபா வரிச் சலுகை அளிக்கப்படும்,

வியாபார மொத்த விற்பனவு வரி 5 சத வீதத்திளுல் உயர்த்தப்படும். எனினும் பருப்பு, கருவாடு, கோதுமை, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் சில வகைப் பொருள்களுக்கு வியாபார மொதத விற்பனவு வரியில் இருந்து விலக்கு அளிக்கப்படும். விவசாய உபகரணங்கள், துணி வகைகள், பண்ணை உபகரணங்கள் ஆகியவற்றுக்கும் வியாபார மொத்த விற்பனவு வரி விதிக்கப்படமாட்டாது.

அடுத்த வருடத்தின் இறுதிக் காலாண்டிலிருந்து இந்த வரியை பொருள்கள் மற்றும் சேவைகள் மீதான வரி என்று மாற்றம் செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆடை தயாரிப்புக்கான புடவைகளின் இறக்குமதி தீர்வை 50 சத வீதத்திலிருந்து 35 சத வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

விவசாய உபகரணங்களுக்கான தீர்வை 35 வீதத்திலிருந்து 30சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

30க்கு மேற்பட்ட ஆசனங்களை கொண்ட பஸ் வண்டிகளின் மீதான இறக்குமதி தீர்வை 35 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. ஆட்டோக்களின் மீதான இறக்குமதி தீர்வை 25 சதவீதத்திலிருந்து 20 சத வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

பெரிய மோட்டார் சயிக்கிள்களுக்கான இறக்குமதி தீர்வை 10 சத வீதமாகும், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மீதான தீர்வை 45 சத வீதத்திலிருந்து 35 சத வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. சைக்கிள்கள் இறக்குமதி மீதான 250 ரூபா மேலதிக கட்டணம் நீக்கப்பட்டுள்ளது. ரயர்கள், ரியூப்புக்கள மீதான தீர்வை 10 சத வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. அச்சுத்தாள், காகிதாதிகள் குளிரூட்டிகள், அதிகுளிரூட்டிகள், மின்சார மோட்டார்கள் சில வகை உணவுப் பொருள்கள் மீதான வரி 10 சத வீதம் குறைக்கப்பட்டுள்ளது.

சலவை இயந்திரங்கள், தள விரிப்புகள், தள மினுக்கிகள், வைக்யூம் கிளீனர்கள் ஆகியவற்றின் மீதான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. மதுபான கடைகளுக்கான உத்தரவு பத்திர கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது;

வருமான வரி மீதான மேலதிக கட்டணம் தற்போதைய 15 சதவீத நிலையில் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்படும்.

தனிப்பட்டவர்களுக்கு சொந்தமான டீசல் கார்கள், ஜீப் வண்டிகள், வான்கள் முதலியவற்றின் மீது பத்தாயிரம் ரூபா வருடாந்த வரி அறவிடப்படும்.

நிதி அதிகார சட்ட ஏற்பாடுகளுக்குஅமைய சிறிலங்கா ரெலிகொம், இலங்கை பெற்ருேலிய கூட்டுத்தாபனம் ஆகியவற்றிடமிருந்து விசேட வரியொன்று அறவிடப்பட இருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுதி வசதிகள் கட்டிக கொடுக்கப்படும். விலைவாசிகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கைப் பிரஜை அல்லாதவர்களுக்கு அசையாத சொத்துக்களை விற்கும்போது 100 சத விகித உரிமை மாற்ற வரி செலுத்த வேண்டும். ஆயினும் எந்தவொரு பெரிய கட்டிடத் தொகுதியிலும் 6வது மாடிக்கு மேற்பட்ட சொத்தாக இருந்தால் இந்த 100 சத விகித உரிமை மாற்ற வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

பாண், மா ஆகியவற்றின் பேரில் மக்களுக்கு வழங்கப்படும் மானியமும் விவசாயிகளின் நன்மை கருதி உரத்திற்கான மானியமும் தொடர்தும் கிடைக்கும். வெளிநாடுகளில் தொழில் புரியச் செல்லும் ஊழியருக்கு ஆரம்ப நிதி உதவியும், பயிற்சி வசதிகளும் வழங்கப்படும்.

வெளிநாடு சென்ருேரின் நலன்களைக் கவனிக்க சேம நல உந்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவார்கள் 5000 டொலர் வரையில் தீர்வையின்றி பொருட்களை வாங்க அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

புனாமைக்கப்படும் அரச தொழில் நிறுவனங்களில் 5 சத வீதமான பங்குகள் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு என ஒதுக்கப்படும்.

தொழிலாளர்களின் உரிமைகளுக்கு பாகாப்பு அளிக்கும் அதே வேளையில் தேசிய அபிவிருத்தி நடவடிக்கையில் தனியார் துறையினரின் பங்கு அதிகரிக்கப்படும். இதற்கென தொழில் முயற்சிகள், சீர்திருத்த ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட இருக்கின்றது சலுகை அடிப்படையிலும் இரகசியமானதும் அரசாங்கச் சொத்துக்களை விற்கும் முன்னைய நடைமுறை முற்ருக ஒழிக்கப்படும்.

பெருந்தோட்டங்களின் நிர்வாகம் நீண்டகால குத்தகையாகக் கொண்டிருக்கும் தோட்டங்களின் உரிமை அரசாங்கத்திடம் இருக்கும்.

வங்கிகள் வெளியார் தலையீடின்றி இயங்க அனுமதிக்கப்படும். காப்புறுதிததுறையில் புதிய சட்டங்களையும், பிரமாணங்களையும், கொண்டுவர அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

விவசாயிகளுக்கும், சிறு தொழில் முயற்சியாளர்களுக்கும் உதவும் பொருட்டு விவசாய வங்கிகள் அமைக்கப்படும். சமுத்தி இயக்கம் எதிர்வரும் யூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப்படும். 12 லட்சம் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினுல் நன்மை அடைய இருக்கின்ருர்கள்

500 ரூபா அல்லது அதற்குக் குறைந்த சராசரி மாத வருமானம் உள்ள ஒரு லட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா வழங்கப்படும். ஆயிரம் ரூபாவை சராசரி மாத வருமானமாகப் பெறும் 11 லட்சம் குடும்பங்களுக்கும் மாதந்தம் 500 ரூபா வழங்கப்படும் சுய தொழில் முயற்சி மூலம் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வாய்ப்பளிக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் சமுக்தி திட்டங்களுடன் ஒன்றிணைக்கப்படும். [கே-ம-சி]

## கோழிகளுக்கு தூக்கநோய்

[அரியாலை]

யாழ். இராசாவின் தோட்டம் அர்ச்சுனு வீதியிலுள்ள சில வீடுகளில் உள்ள கோழிகளுக்கு தூக்கநோய் ஏற்பட்டுள்ளது. இதுவரை 10க்கு மேற்பட்ட கோழிகள் இறந்துள்ளதாக தெரிய வருகின்றது. (59]

### பொன்மொழி... ணிவாக்கு

முடியும் என்பது நம்பிக்கையின் ஆரம்பம். முயற்சிக்கு முன்னுரை எழுச்சிக்கு வித்து. செயலுக்கு ஆதாரம். வெற்றிக்கு ஊன்றுகோல்.

- நெப்போலியன்

## நமது நோக்கு

### நோயாளர் நலன் சேவை

நோயாளர் நலன் புரிச் சங்கம் தனது சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் கொடி வாரத்தை ஆரம்பித்துள்ளது.

அரசாங்கத்தின் உதவிகள் பல ஒழுங்காகக் கிடைக்காத காரணத்தாலும், உள்நாட்டு யுத்தச் சூழல் காரணமாகவும் நோயாளர் படும் அவதிகள் கணக்கிலடங்கா.

பாதைகள் சீரழிந்து கிடக்கின்றன; எரிபொருள் தட்டுப்பாட்டால் போக்குவரத்துச் சீராக இல்லை. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் நோயாளிகள்.

சிகிச்சை பெற்று வெளியேறும் போதுகூட நிம்மதியாக வீடு திரும்ப வசதியான வாகன சேவையின்றித் துன்பமடைகின்றனர்.

மருத்துவ மனைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சில ஆதரவற்ற நோயாளிகள் படும் துன்பமும், மனச்சோர்வும் எழுத்தில் வடிக்க முடியாதவை.

இதேபோல - அவசரச் சிகிச்சையின்போது, குருதி ஏற்ற வேண்டுமாயின், தேவையான குருதியைப் பெற்றிட நோயாளிகளின் நெருங்கிய உறவினர் படும அவதிகள தான் எவ்வளவு?

குருதிக் கொடையை ஊக்குவித்து தேவையான போது பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அளிக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.

தங்கியிருக்கும் நோயாளிகள், மருந்தால் வியாதிகளை விரட்டுவதோடு, மன அமைதியோடு, பொழுதினைப் போக்கிட நல்ல நூல்களையும், பத்திரிகைகளையும் படிக்க வாய்ப்புகள் அளிக்க வேண்டியதும் அவசியமல்லவா?

இவை போன்ற பல சேவைகளைச் செய்வது யார்?

தனிப்பட்டவர்கள் மனிதாபிமான முறையில் சேவை வழங்க முன்வந்தாலும் அது சீராக நடைபெறுமா?

எனவேதான் இவற்றை ஒழுங்குபடுத்தக் கூடியதான அமைப்பின் அவசியம் உணரப்பட்டது; நோயாளர் நலன்புரிச் சங்கம் அமைக்கப்பட்டது.

ஏற்கனவே நல்லசேவைகளை ஆற்றிவரும் இச்சங்கத்தின் சேவைகள் விரிவுபடுத்த இருப்பது நல்ல புண்ணியமான காரியம்.

இதற்குத் தாராளமாக நிதி வழங்கி ஊக்குவிக்க வேண்டியது பொது மக்கள் கடமை என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்!

**வளத்தின் செழிப்பு வறுமையின் அழிப்பு**

# "எமது விடுதலைப் போராட்டம் சர்வதேச மயப்பட்டுவிட்டது"

— கரிகாலன் உரை

(சாவகச்சேரி)

''மாவீரர்களுடைய புனிதத் தன்மையினால் இந்த மண்ணில் ஒரு எழுச்சி உதயம் தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது'' இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு. சி, ரவி தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ''இசை பாடும் திரிகோணம்'' ஒலிப் பதிவு நாடா வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும்போது கூறியதாவது; மாவீரர்களுடைய வரலாறு தேசத்தின் விடுதலையை நாளை வென்றெடுக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

மொழி. இன, கலைபண்பாடு வரலாற்று ரீதியாக ஒரு எழுச்சியை கொண்டிருக்கிற நாங்கள் எமது தேசத்தின் எல்லையை வரையறுப்பதற்காக தேச விடுதலைப் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் தமிழீழ தலைநகராம் திருமலை மாவட்டத்தில் சிறந்து விளங்கும் இசை பாடும் திரிகோணம் ஒலிப் பதிவு நாடாவை வெளியிடுகின்றோம் என்றும் தெரிவித்தார்

தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு- கரிகாலன் உரையாற்றும் போது கூறியதாவது: சிறிலங்கா அரசுக்கும் எமக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை கண்காணிப்பதற்கு உலக நாடுகளிலிருந்து குறிப்பாக கனடா. நோர்வே. நெதர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து கண்காணிப்புக் குழுக்கள் யாழ், வந்து எம்மைச் சந்திந்து சென்றதன் மூலம் எங்கள் விடுதலைப் போராட்டம் உலகளாவிய ரீதியில் சர்வதேசமயமாக்கப் பட்டு இருக்கிறது என்று தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா. யாழ். மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி ஆகியோர் மங்கள விளக்கேற்ற திருமலை மாவட்ட சிறப்பு தளபதி திரு. பதுமன் பாடல் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட. மட்டு- அம்பாறை சிறப்புத் தளபதி திரு. கருணா பெற்றுக்கொண்டார்.

இவ்வொலிப்பதிவு நாடா நிகழ்வில் பங்கு கொண்ட கலைஞர்களும். தமிழீழ அரசியல் பொறுப்பாளர் திரு, சு, ப, தமிழ்ச்செல்வன் பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.

மதிப்பீட்டுரையை பேராசிரியர் அ. சண்முகதாசும், ஆசிரியர் திரு. சடாமார்க் கண்டுவும் நிகழ்த்தினர். பதில் உரையை கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார். (155-ரி)

## யாழ். மாணவர்களின்

# வெட்டு புள்ளி பிரச்னை ஆராய கமிஷன் நியமிக்கப்படும்!

(கொழும்பு)

யாழ். மாணவர்களின் வெட்டுப்புள்ளிகள் பிரச்னை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கைகள் சமர்ப்பிக்க ஒரு கமிஷன் நியமிப்பதற்கு ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்த கமிஷன் அறிக்கையின்படி உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

ஈ. பி.டி. பி. இயக்கத்தினர் நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகாவை அலரிமாளிகையில் சந்தித்து நடத்திய பேச்சு வார்த்தைகளின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

இச்சந்திப்பின் போது யாழ்ப்பாண மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கப்பட்டது.

இதேவேளை அமைச்சர் தொண்டமான் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்று மலையக மக்கள் பிரச்னை தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியது.

மலையக மக்களின் பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக ஆரய்ந்து தீர்வு காண ஜனாதிபதி சந்திரிகாவின் கீழுள்ள தேசிய நல்லிணக்க அமைச்சில் தனிப்பிரிவு ஒன்றை ஆரம்பிப்பது என்று இச்சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டது. —ரி

## இராசி பலன்

09-02-1995

வியாழக்கிழமை

**(தமிழுக்கு தை 26)**

நவமி மு, ப. 11-24 வரை, ரோகினிவைகறை 5-31 வரை மரணயோகம், இராகு காலம் பி.ப. 2-05 முதல 5-35வரை, சுபவேளை காலை 8-05 முதல் 9-35 வரை.

மேடம்: குழம்பித் தெளிதல், மனச்சங்கடம், பண முடை.

இடபம்: இனிய உறவு, வசதியான இடமாற்றம், புகழ்.

மிதுனம்: பணிந்துபோதல், தவறான சிந்தனை, அலைச்சல்.

கடகம்: குடும்பசுகம், கலந்துரையாடல், தற்பெருமை

சிங்கம்: நோய் தணிவு, வாக்கு வசீகரம், பிறர் உதவி.

கன்னி உட்பூசல், காரிய தாமதம், கண்டனம்.

துலாம்: அமைதியற்றநிலை. ஆடம்பரச் செலவு. மனச் சுமை.

விருச்சிகம்: நண்பர் சகவாசம், புதியமுதலீடு, தாயார் மகிழ்ச்சி.

தனுசு: சகோதரவாஞ்சை, காரியசித்தி. பயண ஒழுங்கு.

மகரம்: தனிமைப்படல், தொழில் பகை, அகங்காரம்.

கும்பம்: எதிரிகள் துயர், மனவெருட்சி, பயனற்ற செயல்.

மீனம்: கூடிப் பேசுதல், தொழில் உறவு, குடும்ப நன்மை.

**ஜோஸ்யர்**

## வடபகுதி மக்களின்

# கருத்தை அறிவதில் ராணுவம் ஆர்வம்!

[கொழும்பு]

வடபகுதியிலிருந்து வருபவர்களிடம் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது அரசு புலிகள் மோதல் தவிர்ப்பு பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று இராணுவத்தினர் விசாரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் என்ன மோதல் தவிர்ப்பு யுத்த நிறுத்தமாக மாறி நிரந்தர சமாதானத்துக்கு வழி வகுக்குமா எனவும் விடுதலைப்புலிகளுக்கு மக்களின் ஆதரவு பற்றியும் இராணுவத்தினர் வடபகுதி மக்களின் கேட்கின்றார்கள் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. [ரி]

## தமிழ்மாநாட்டில் அவமதிப்பு

# சுவீடிஸ் பேராசிரியர் இழப்பீடு கோரிக்கை

[கொழும்பு]

தஞ்சாவூரில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழக அரசினால் அவமதிக்கப்பட்டவர்களில் ஒருவரான சுவீடிஸ் பேராசிரியர் பீற்றர் கோல்த் இந்திய அரசிடம் இழப்பீடு கோரியுள்ளார்.

மேற்படிமாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபோது பேராசிரியர் சிவத்தம்பி' அ. சண்முகதாஸ் தம்பதிகள் போன்றவர்களுடன் திரு. பீற்றர் கோல்த்தும் அவமதிக்கப்பட்டு மாநாட்டில் கலந்து கொள்ள விடாமல் திருப்பி அனுப்பப்பட்டது தெரிந்ததே

திரு. பீற்றர் கோல்த் இது தொடர்பாக தனது ஆட்சேபனையை இந்திய மத்திய அரசுக்கு ஏற்கனவே தெரிவித்திருந்தார். -ரி

## இலவச கல்விச்சேவை

[கொழும்புத்துறை]

யாழ். பண்டத்தரிப்பு பிரதேச இந்து வாலிபர் சங்கம் இலவசக்கல்விச் சேவையைத் தற்போது நடாத்தி வருகின்றது.

வடலியடைப்பில் அமைந்துள்ள ''விவேகானந்தா மனையில் அப்பகுதி மாணவர்களின் நன்மை கருதி இச்சேவையை வழங்கிவரும் இச்சங்கம் இரவு வேளைகளில் மின்சார வசதிகளையும் இலவசமாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. -154

## போட்டிப் பரீட்சை

[கொழும்புத்துறை]

வடக்கு - கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தினால் நடாத்தப்படும் தையல் பயிற்சி போதனாசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சை மார்ச் மாதம் ஏழாம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது. - 154

## பலதும் பத்தும்

### பௌமன்

கிரகங்களில் ஒன்றான செவ்வாயைப் பௌமன் என்பதேன்? பூமித்தாயின் கர்ப்பத்தில் உதித்ததாம். சாதகத்தில் செவ்வாயின் பலன் அதிகமாகி இருந்தால் ......மண்ணைக் காப்பவர்களாக- அரசியல் தலைவர்களாக - படை அதிகாரிகளாக-பொறியியல் வல்லுநர்களாக-மருத்துவத்துறையில் சிறந்த சத்திர சிகிச்சை நிபுணர்களாக- விளங்குவார்களாம்.

இரத்தம் - அதனால் ஏற்படும் காயங்கள், இரத்த உரித்தான சுகோதரம், வெப்பம்-அதனால் விளையும் கோபம், ஆயுத பாவனை, கண்டித்தல், தண்டித்தல், தலைமை வகித்தல், சுறுசுறுப்பு, துணிச்சல் போன்றவற்றைச் செவ்வாய் சாதகத்தில் நிற்கும் நிலையைக் கொண்டு சோதிடர்கள் கணித்துக் கூறுவார்களாம்.

வீரபத்திரர், முருகன் வழிபாடுகளால் செவ்வாயின் அருள் கிட்டும் என்பது நம்பிக்கை!

— மயூரன்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-02-09**

வியாழன் இரவு

08-01 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 சித்த மருத்துவக் குறிப்புகள்
08-20 உழைப்போம் உயர்வோம்- நிகழ்ச்சியில் 'வருமுன் காப்போம்' குறுநாடகம்
08-30 செய்திகள்
08-40 தாயகப் பாடல்கள்
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1995-02-10**

வெள்ளி காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப்பாடல்கள்
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-02-09**

வியாழன் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 இசையும் கதையும்— ''உணர்வு''
05-50 தமிழீழ கானங்கள்
06-00 சிந்தனைக்கு சில விடிைகள்
06-02 பொன் விளையும் பூமி
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 கேள்வி பதில்- விளையாட்டுத் தொடர் பானவை
06-25 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

## மனைவி, மாமி, மைத்துனரை கொன்ற கான்ஸ்டபிள்! தானும் தற்கொலை!!

[கொழும்பு]

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தனது மனைவி, மாமியார், மைத்துனர் ஆகிய மூவரையும் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்தபின்பு அதே துப்பாக்கியால் தன்னைச் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நீர்கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் நடைபெற்றது. கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக தானியங்கும் துப்பாக்கியால், கணப்பொழுதில் தன்மனைவி, மாமியார், மைத்துனர் ஆகிய மூவரையும் சுட்டுக்கொலை செய்தபின் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். வி-சி

## தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 300 புலி சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் அனுப்பவும்

(சென்னை)

தமிழகத்தில் விசேட முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 300 விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் யாழ்ப்பாணத்திற்கு செல்ல அனுமதிக்கப்படவேண்டும்.

இவ்வாறு இந்திய தேசிய மனித உரிமைகள் கமிஷன் தலைவரான நீதியரசரான திரு. ரங்நாத் மிஷ்ரா தெரிவித்துள்ளார். அண்மையில் தமிழகத்தில், இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள அகதி முகாம்களுக்கு நேரில் சென்று பார்வையிட்ட பின் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: தமிழர் தங்கியுள்ள அகதி முகாம்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் கடந்த 18 மாதங்களாக செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் அகதிமுகாம்களுக்கு சென்று மருத்துவ வசதி வழங்க அனுமதிக்கப்பட வேண்டும். இந்த முகாம்களின் நிலைமைகள் மேலும் மேலும் முன்னேற்றப்படவேண்டும் எனவும் கூறியுள்ளார். -சி

## இறுதி வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

(யாழ்ப்பாணம்)

07-02-95 அன்று தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் வீரச்சாவை தழுவிக்கொண்ட வீ. வே. குமரன் (வாமதேவன் றஜீகரன்/ நஞ்சன் தாவடி வடக்கு, கொக்குவில்), வீ. வே. சுடர்மணி/ வேலு (சிவலிங்கம்-வரதன், புங்குடுதிவு) ஆகியோரின் வித்துடல்கள் இன்று காலை 9-00 மணிக்கு அவரவர் இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்படும்.

பின் 5 சந்தி கார்த்திகை பாலர் பாடசாலையில் மக்களின் இறுதி வீர வணக்கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு இறுதி வீர வணக்கக் கூட்டமும் நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரர்களின் வித்துடல் தூய விதைகுழியில் விதைக்கப்படும். -சி

## வடக்கு—கிழக்கில் போர்நிறுத்தம் தொடர்ந்தால் ரூபா 1,300 கோடி மீதமாகும்

(கொழிம்பு)

தற்போதைய போர் இடைநிறுத்தம் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொடருமானால், இவ்வருடத்திற்கான பாதுகாப்புச் செலவில் 1,300 கோடி ரூபா மீதமாகும் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது வருடாவருடம் சிறிலங்காவில் 2,500 கோடி ரூபா போருக்காகச் செலவிடப்படுகிறது.

கடந்த மாதத்திலிருந்து விடுதலைப் புலிகளுக்கும், அரசுப் படைகளுக்கும் இடையில் நடைமுறையில் இருந்துவரும் போர் இடைநிறுத்தம் இவ்வருடம் முழுவதும் எதுவித பிரச்னையுமின்றித் தொடருமானல் 1,300 கோடி ரூபா மீதப்படுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்கு-கிழக்கில் மோதல் தவிர்ப்பு உடன்பாடு, கடந்த ஒரு மாதமாகப் பாரதூரமான சம்பவங்கள் எதுவுமின்றித் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதும் தெரிந்ததே. கே-சி

## இளவாலைப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்றவர் படையினரால் தாக்குண்டார்

(யாழ்ப்பாணம்]

இளவாலைப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற ஒருவரை பிடித்த படையினர் அவரை பலமாக தாக்கிய பின் விடுவித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இளவாலைப் பகுதிக்கு வீடு பார்க்கச்சென்ற சூசைப்பிள்ளை ஜோசப் [45 வயது] என்பவரை அப்பகுதியில் பதுங்கியிருந்த படையினர் பிடித்துச் சென்றனர். காலை 9- 30 மணிக்கு பிடிக்கப்பட்ட இவர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் பலமாகத் தாக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின் நண்பகல் 12-30 மணியளவில் விடுவிக்கப்பட்டார்.

சைக்கிளுடனும் விறகுடனும் பிடிபட்ட இவர் பின் சைக்கிளை இழந்த நிலையில் வீடு திரும்பினர், (சி[

## மாவின் விலையை அதிகரிக்க அமைச்சர்கள் மறுப்பு

(கொழும்பு)

மாவின் விலையை உயர்த்துவது சம்பந்தமாக கடந்த வாரம் இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

மா விலை அதிகரிப்பதற்கு பல அமைச்சர்களும் எதிர்ப்புத் தெரிவித்தமையால் மா விலை உயர்வு யோசனை நிராகரிக்கப்பட்டுள்ளதாம்.

உலகச் சந்தையில் மாவின் விலை உயர்ந்துள்ளபடியால் கூடிய விலைக்கு மாவை வேண்டியே, மக்களுக்கு தற்போதைய விலையில் வழங்குவதால், அரசாங்கத்துக்கு பெரும் நட்டம் ஏற்பட்டு வருகின்றது.

நாட்டில் அரிசியின் விளைச்சல் பெருகியுள்ள போதிலும் மாவின்விலை குறைந்துள்ளபடியால் நெலை உத்தரவாத விலைக்கு விற்கமுடியாது விவசயிகள் கஷ்டமுறுகின்றனராம். ம-சி

## நெல் கொள்வனவு

(யாழ்ப்பாணம்[

யாழ். குடாநாட்டு விவசாயிகளிடமிருந்து சோழன் நெல் அரிசி வாணிப நிலையம் நெல் கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது.

நாளை 10ம் திகதி முதல் ஒரு மூடை [69 கி. கி] நெல் 1250 ரூபா விலையில் கண்டி வீதி மீசாலை, நெல்லியடி, நீர்வேலி, சுதுமலையில் உள்ள சோழன் அரிசி ஆலைகளால் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ·சி

## அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களிற்கான அவசரப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயங்கள் தொடர்பாக முடிவெடுக்கப்படவுள்ளதால் தவறாது அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (சி)

## கலைப்பீட மாணவர் நேற்றும் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 3ம் வருட கலைப்பீட மாணவர் ஒருவர் மீது பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து நேற்று மூன்றும் வருட மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்லாது பகிஷ்கரித்ததைத் தொடர்ந்து இவர்களுக்கு ஆதரவாக நேற்று 2ம் வருட, 4ம் வருட கலைப்பீட மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

புதிய மாணவர் இருவர் வந்த சைக்கிள்கள் சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து மறுநாள் அவர்கள் மாட்டு வண்டிலில் பல்கலைக்கழகத்துக்கு வந்ததாகவும் இதனைத் தொடர்ந்து அங்கு பிரச்னைகள் தோன்றியதாகவும் கூறப்படுகிறது. -162-சி

### இந்திய மீனவர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கடந்த 3ம் திகதி தனுஷ்கோடியில் இவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்ததாகவும், அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கி முனையில் இவர்களைத் தலைமன்னருக்கு அழைத்துச் சென்று அங்கு வலைகள் மற்றும் உபகரணங்களைப் பறித்துக்கொண்டு இவர்களைத் திருப்பி அனுப்பும்போது துப்பாக்கியால் சுட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -கே-சி

### வடபகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யூறுகள் இருந்தமையே இந்நிலைக்கு காரணமாகும். இது தவிர சாதனங்கள். வாகனங்கள், கட்டிடங்கள், அலுவலக இயந்திரங்கள், நிர்மாண வேலைகளுக்கும் முறையான பராமரிப்புக்கும் பாவிக்கப்பட்ட சாதனங்கள் ஆகியன பெரிதும் சேதம் அடைந்திருக்கின்றன.

நீர்ப்பாசன திட்டங்களை பழுதுபார்க்கவும் புனரமைக்கவும் 455 கோடி 40 லட்சம் ரூபா தேவையென அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள உப்பாறு நீர்த்திட்டம், உப்புநீர்கட்டு போன்றவையும் பல சிறிய குளங்களும் பழுதுபார்க்கப்பட இருக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு குளம், அக்கராயன்குளம், பல்லவராயன் கட்டுக்குளம் உட்பட பல குளங்கள் பழுதுபார்க்கப்பட இருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வரணிக்குளம், மருதன்குளம், பெரியான்குளம், ஐயன்குளம், முத்தையன்கட்டு குளம், உடையார்கட்டு குளம், விஸ்வமடு குளம், தண்ணிமுறிப்பு குளம் உட்பட 14 பெரிய குளங்களும் ஏனைய சிறிய குளங்களும் அபிவிருத்தி செயப்படும்.

வவுனியா மாவட்டத்தில் 5 பெரிய குளங்களும், மன்னார் மாவட்டத்தில் 3 பெரிய குளங்களும் பழுதுபார்க்கப்பட இருக்கின்றன. கே-சி

### சமாதானம் ஏற்படும்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

4 நாள் விஜயத்தை மேற்கொண்டு மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கு சென்று அரசதிணைக்கள உயர் அதிகாரிகளை சந்தித்தார். அத்துடன் அம்மாவட்டங்களின் நிலைமைகளை நேரில் பார்த்து அறிந்து கொண்டார்கள்.

இதேபோன்று நோர்வே அமெரிக்கா நாட்டு பிரதிநிதிகளும் கடந்த வாரம் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு நேரில வந்து அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வது தொடர்பான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்தன.

வடக்கு - கிழக்கில் பூரண சமாதானம் ஏற்படும் பட்சத்தில் அப்பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு பல கோடி ரூபாவை வழங்க பல நாடுகள் முன்வந்திருப்பதும் தெரிந்ததே. [கே - சி)

### அரச தரப்பினரிடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகவலை 'லங்கா புவத் தெரிவித்ததாக ரூபவாஹினி தெரிவித்தது அச்செய்தி மேலும் தெரிவிக்கையில்;

அரசின் சகல சமாதான முயற்சிகளுக்கும் விடுதலைப் புலிகள் சாதகமான முறையில் செயற்பட்டு வருகிறார்கள். சமாதானத்தை ஏற்படுத்துவதில் புலிகள் ஆர்வமாக இருக்கிறார்கள் என கண்காணிப்பு குழுவினர் தெரிவித்துள்ளனர், எனவும் குறிப்பிட்டது.

இதேவேளை வடக்கு - கிழக்கில் மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் குழு இன்று முதல் தமது பணியை ஆரம்பிக்கவுள்ளனர் என பிரதி பாதுகாப்பு அமைச்சர்கேணல் அனுருத்த ரத்வத்தை நாடாளுமன்றில் கூறியுள்ளபோதும் இக்குழுவினர் இன்று செயல்படுவார்களா என்பது குறித்து எதுவித உத்தியோக பூர்வ அறிவிப்பும் இதுவரை வெளியிடப்படவில்லை. சி

### 9,000 கோடி

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவாக (9 ஆயிரம் கோடி ரூபாவாக) இருக்கும். இத்துண்டு விழும் தொகை வெளிநாட்டு கடன்கள் மூலம் ஈடு செய்யப்படும் எனவும் பிரதி நிதிஅமைச்சர் அறிவித்தார்.

இதேவேளை வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு முடிந்தபின் ஐ தே. கவினர் நாடாளுமன்றில் கூச்சலிட்டு குழப்பம விளைவித்ததும் குறிப்பிடத்தக்கது! கே-சி

### இரு ஈ.பி.டி,பியினர்

(1ம் பக்கத தொடர்ச்சி)

குழுவில் இயங்கி வந்த மேற்படி இருவரும் அங்கிருந்து நீந்தி வந்து யாழ்ப்பாணத்தில் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்.

கடந்த 4-ம் திகதி சிவலிங்கம் சந்திரசேகரம் (வயது 26) வவுனியா, இயக்கப்பெயர் - ராஜ் என்பவர் ரி - 56 11, 150 ரவைகள், 5 மகசீன். 2 ஜீ. ஆர் கைக்குண்டுகளுடனும் முத்துவேல் கண்ணசமூர்த்தி (வயது 33] மன்னன் - திருமலை இயக்கப் பெயர் தேவராஜ் என்பவர் கடந்த 6-ம் திகதியும் சரணடைந்தனர். (சி)

### சிமெந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மதிபெற்று கொண்டு வந்த 200பக்கற்சிமெந்தைவவுனியாவிலுள்ள ராணுவ அதிகாரி அவற்றை எடுத்து செல்ல அனுமதி மறுத்துள்ளார்.

இது தொடர்பாக கட்டடதிணைக்கள அதிகாரி கிளிநொச்சி அரச அதிபரிடம் முறையிட்டுள்ளார்.

கிளிநொச்சி வைத்தியசாலை போர் விமானங்களின் குண்டு வீச்சினல் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த சிமெந்து பக்கெற்றுகள் கொண்டுவர இராணுவம் அனுமதி மறுத்ததால வைத்தியசாலையை மீண்டும் திருத்தவோ இடிபாடுகளை சீர் செய்யவோ முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ]கே-சி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-